| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர்.சி.உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பி.எச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக்கல்வி<br>அலுவலர்கள் |

**ந.க.எண். 087567 / NTS /2019** **நாள் : 06.09.2019**

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய திறனாய்வுத் தேர்வு நவம்பர் 2019 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் – குறித்து.

பார்வை : இதே எண்ணிட்ட செய்திக்குறிப்பு நாள்.

*********

பார்வையில் காணும் செய்திக்குறிப்பில் 2019–ம் ஆண்டு நவம்பர் 3–ல் நடைபெறவுள்ள தேசிய திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் பத்தாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை 22.08.2019 முதல் 07.09.2019 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

<u>பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்;-</u>

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பித்த 10- ம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்னும் இணையதளம் மூலமாக 09.09.2019 பிற்பகல் முதல் 18.09.2019 வரை பதிவு செய்யலாம் என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, மெட்ரிக் பள்ளி, ஆங்கிலோ-இந்தியன், CBSE மற்றும் KV (கேந்திர வித்யாலயா) பள்ளிகளுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## PROCEDURE

www.dge.tn.gov.in **(OR)** www.dge.tn.nic.in

↓

**Click** –ACCESS TO ONLINE PORTAL

↓

NTSE EXAM- NOV 2019
APPLICATION REGISTRATION

↓

School Registration

↓

ENTER – USER ID (UDISE CODE) - PASSWORD (EMIS NO.)

2..

<u>அறிவுரைகள்</u>

1. இந்த வருடம் 2019 முதல் EMIS- ன் அடிப்படையில் மாணவர்களின் பதிவு நடைபெறவுள்ளது. எனவே, பள்ளிகளுக்கான EMIS எண்ணிற்குரிய USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி மாணவர்களின் EMIS எண்ணினை பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். CBSE/KV மாணவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும்.
   ICSE / IGCSE பள்ளி மாணவர்களின் விவரங்களைப் புதிய USER ID, PASSWORD – ஐ பயன்படுத்தி பதிவேற்றம் செய்த பின்னர் இணையதளம் வழியாக தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**<u>பதிவேற்றம் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவரங்கள்:</u>**

2. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரிதானா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையான அட்டையின் நகல் மற்றும் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் EWS/OBC(NonCreamylayer)/SC/ST மாணவர்களின் சான்றிதழ்களின் நகலினை மாணவர்களிடமிருந்து பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

4. OBC என்பது BC, MBC, BC(M), DNC என்பவை உள்ளடக்கியதாகும். ஆனால் இவர்களில் OBC சான்றிதழ் (Non Creamy Layer) வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே இரண்டாம் நிலை தேர்வெழுத அனுமதி வழங்கப்படும்.

5. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.

6. **வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.**

7. பெற்றோரின் தொலைபேசி/கைப்பேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/கைபேசி எண்ணையே பதிய வேண்டும். பள்ளியின் தொலைபேசி என்ற கலத்தில் மட்டும் பள்ளியின் தொலைபேசி எண்ணினை பதிந்தால் போதுமானது.

3..

8. 09.09.2019 பிற்பகல் முதல் 18.09.2019 வரை பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் இருப்பின் சரி செய்து கொள்ளலாம். அதன் பின் எந்த பதிவுகளும் கண்டிப்பாக மாற்ற இயலாது.

பதிவேற்றம் முடிந்தவுடன் Summary Report மற்றும் தேர்வு விவரத்தினை (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி இயக்குநர் அலுவலர்களிடம் 27.09.2019–க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பித்த பள்ளிகளில் இருந்தும் தேர்வுக் கட்டணத் தொகை பெறப்பட்டுள்ளதா என்பதை உதவி இயக்குநர்கள் உறுதி செய்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

**விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம்: 09.09.2019 பிற்பகல் – 18.09.2019**
**விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் : 18.09.2019**

**Summary Report/Fees Receipt –ஐ உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்: 23.09.2019 – 27.09.2019**

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் உரிய இணைப்பு சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசம் வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்துமாறும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

நகல்.

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

**Mail ID:** **ntsexam2019@gmail.com**
**Mobile No. : 9385494105/ 9498383073**